**மஹரகம நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2010 யூலை 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனது கருத்துரைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளின் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட மஹரகம நகரசபை சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் நிலை மற்றும் பெறுமதிகள் கீழ் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | கணக்கின் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா 000’ | | ரூபா 000’ |
| கணக்குகளில் குறைத்துக் காட்டுதல் | 03 | 1,767 | 01 | 11,816 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

12 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 293,981,055 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 257,047,932 ஆக இருந்தது.

### 1.3.3 தீர்க்கப்படாத மீதிகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 3,457,309 கூட்டுப்பெறுமதியான கணக்கு மீதிகள் காலமாகத் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டதுடன், முன்னைய வருடங்களில் எனது அறிக்கைகளில் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2011 யூன் 30 திகதி வரை 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 59,274,655 ஆக இருந்தது.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 86,659,080 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (i) நகர சபைக் கட்டளைச் சட்டம் (255 ஆவது அத்தியாயம்) | 2011 சனவரி 12 ஆந் திகதி வரையில் 16 அறிவித்தல் பலகைகளிலிருந்து ரூபா 368,800 தொகையொன்று சபையினால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) நி.பி 387 | 2010 ஆம் ஆண்டு முழுவதும் சபையின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் மேலதிகப்பற்று காணப்பட்டது. |
| (ஆ) நி.பி 395 (இ) | 2008 நவம்பர் முதல் 2010 திசெம்பர் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) நி.பி 757(2) | பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,003,872 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,767,738 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

#### 2.2.1 வங்கி மேலதிகப்பற்று வட்டி

நகர சபையின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் சாதகமான மீதியை விஞ்சி 2005 யூலை மாதம் தொடக்கம் 2010 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மேலதிகப்பற்று பெறப்பட்டமையினால் அக்காலப்பகுதியில் வங்கி மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 2,713,169 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 2.2.2 வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(அ) கடைசியாகத் தயாரிக்கப்பட்டிருந்த 2008 ஒக்தோபர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற ரூபா 334,200 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்டிருந்த வசூலிக்கப்படாத காசோலைகளுக்காகவும் ரூபா 7,096,087 கூட்டுத்தொகையான வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்காகவும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கியினால் கழிக்கப்பட்டிருந்த ரூபா 1,611,700 கூட்டுத்தொகையான கட்டணங்கள் மற்றும் வரவு வைத்தல்கள் என்பனவற்றை இனங்கண்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அம்மீதிகள் தொடர்பான பட்டோலைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 337,157 கூட்டுத்தொகையான வரவு மீதி இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 49,679,324 கூட்டுத்தொகையான நேரடிப் பெறுவனவுகள் மற்றும் சுற்றாடல் கணக்கில் சீராக்கவேண்டிய ரூபா 49,387 தொகைகள் என்பனவற்றை உரிய கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பீடு | 2010 உள்ள வாறானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பீடு | 2009 உள்ள வாறானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா '000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 83,300 | 66,414 | 89,465 | 71,000 | 56,272 | 74,688 |
| (ii) | வாடகை | 6,410 | 7,886 | 1,525 | 6,410 | 6,918 | 1,991 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 658 | 240 | 1,587 | 2,022 | 314 | 1,582 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 187,528 | 175,423 | 91,230 | 141,379 | 76,455 | 121,390 |

இப் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகளுடன் இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 நிலுவைக் கடை வாடகை

(i) நகர சபைக்குச் சொந்தமான 03 வியாபாரக் கடைத் தொகுதிகள் மற்றும் மஹரகம வாராந்த சந்தையின் 23 கடைகளிலிருந்தும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகையான ரூபா 427,752 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடைகளை வாடகைக்கு விடும் ஒப்பந்த இலக்கம் 26 இன் நிபந்தனையின் பிரகாரம் வாடகையாளரினால் கடை ஏனைய தரப்பினருக்கு அல்லது உப வாடகைக்கு வழங்க முடியாதிருந்த போதிலும் கொட்டாவ பொதுச்சந்தையில் 06 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.3.3 முதலீட்டு வட்டி

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் ரூபா 5,505,190 தொகைக்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித இலாபமும் கிடைத்திருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

சபையின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயங்கள் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினங்கள்** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| ஆளுக்குரிய வேதனம் | 98,977 | 80,302 | 18,675 | 101,153 | 75,726 | 25,427 |
| ஏனையவை | 120,368 | 144,482 | (24,114) | 63,190 | 145,820 | (82,630) |
| உப மொத்தம் | 219,345 | 224,784 | (5,439) | 164,343 | 221,546 | (57,203) |
| மூலதனச் செலவினம் | 156,000 | 50,054 | 105,946 | 73,965 | 85,587 | (11,622) |
| மொத்தம் | 375,345 | 274,838 | 100,507 | 238,308 | 307,133 | (68,825) |

## 2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம் / செலவு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளக்கூடியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பற்றிய விபரம் பின்வருமாறு

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 04 | 03 |
| இரண்டாம் தரத்தினர் | 87 | 76 |
| ஆரம்ப தரத்தினர் | 238 | 184 |

சபையின் அங்கீகரிக்கப்பட்ட 329 பதவியினரில் 66 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

## 2.7 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.7.1 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

(அ) 2010 டிசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,527,149 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை.

(ஆ) மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் முற்பண மீதிகள் ரூபா 2,292,403 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சில வருடங்களாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.7.2 பெறப்படவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் பெறப்படவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 183,807,253 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.7.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 141,484,022 ஆக இருந்தது.

### 2.7.4 களஞ்சியக் கட்டுப்பாடு

களஞ்சிய இருப்புக்களில் மின்சாரப் பொருட்கள் ரூபா 1,372,380 தொகையான இருப்பு தொடர்பாக களஞ்சிய இருப்புப் பத்தகத்தின் பெறுமதி மற்றும் களஞ்சியப் பொருட்கள் பிரிவுப் பத்திரங்களின் பெறுமதிகள் என்பவற்றிற்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

### 2.7.5 நிலையான சொத்துப் பதிவேடு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**வரி செலுத்துகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளுராட்சி ஆணையாளருக்கு விடுவிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2009 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தேச நிர்மாண வரிக்கான அறிக்கை வழங்கல் காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2009 யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நானாவித சேவை வழங்கல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலாண்டிற்காக ஏற்படுகின்ற வரிகள் மூன்று தவணைகளில் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2009 யூன் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 212,582 தொகையான வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2010 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 யூலை 27 ஆந் திகதியஉள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2005 இன் III ஆம் காலாண்டு மற்றும் 2007 இன் முதல் மூன்று காலாண்டுகளில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்வரி செலுத்தப்படாமையினால் சபைக்கு ரூபா 1,192,760 தொகையான தண்டப் பணம் செலுத்துமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சபையினால் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 செயலாற்றல்

### 2.9.1 டெங்கு ஒழிப்பு விசேட செயற்திட்டம்

(அ) சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற விசேட டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் மிரிஹான சுகாதார நிருவாகப் பகுதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2009 மே 19 ஆந் திகதிய எல்ஜீடீ/03/01/09/01 (மே.மா) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மாதாந்த மற்றும் மூன்று மாத அறிக்கைகள் 2010 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.9.2 கொடிகமுவ மயானத்தில் மரணச் சடங்குச் சேவையின் மரணச் சடங்கு நிலையமொன்றைப் பராமரித்தல்

(அ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 பெப்ரவரி 16 ஆந் திகதிய எல்ஜீடீ/06/05/யூ 13 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரமும் செயற்திட்ட அறிக்கையின் பிரகாரமும் செயற்திட்டங்களுக்காகத் தயாரிக்கப்ட வேண்டிய உப யாப்பு விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய ஒப்பந்தமொன்று தலைவரினால் சேவை வழங்குனர்களுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஒக்தோபர் 18 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் குழுவின் சிபார்சின் பிரகாரம் வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற மரணச் சடங்குச் சேவைகளுக்கான செலவினங்களில் இலாபகரச் சேவை வழங்குனர்களின் விலையில் 10% இனை அறவிடுவதற்கு சபை தீர்மானம் எடுத்திருந்தது. 2010 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது சேவை வழங்குனர்களால் 47 நபர்களுக்காக மரணச்சடங்குச் சேவைகளை வழங்கி ரூபா 166,800 தொகையினை சபைக்குச் செலுத்தியிருந்தது. இவ்வருமானத் தொகையின் உண்மைத் தன்மை தொடர்பாக சபையினால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஒப்பந்தக் கட்டுப்பாடு

### நிர்மாணம்

### (அ) பிரகதிபுர கைப்பந்து விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வலை பதித்து மின்சாரம் வழங்குதல்

(i) மேற்கூறப்பட்ட வேலையினை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2009 நவம்பர் 27 ஆந் திகதி ரூபா 573,780 தொகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரகதிபுர 524 ஏ கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிந்தது. இவ்வேலையின கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் 2’’ X 2’’ அளவில் கேஜ் 10 இல் 3200 சதுரஅடி அளவில் வலை வழங்கப்பட்டு தூண்களுக்கிடையில் இடப்பட்டு குழாய் தூண்களில் பட்டம் இடப்பட்டு வேல்டின் செய்யப்பட்டு உருளை ஆணிகள் இடும் செயற்பாடுகளுக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 288,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 சனவரி 12 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின்போது 2,868.75 சதுர அடி அளவில் மாத்திரம் வலை வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்தும் ரூபா 29,813 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபுா 28,800 செலவிடப்பட்டு வயர் வழங்கி இணைக்கப்பட்ட ரூபா 6,500 தொகையான இரண்டு பிளஸ் விளக்குகளும் பொருத்தப்பட்டிருந்த நமுது விளையாட்டு மைதானத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) மஹரகம புகையிரத மாவத்தை விவேகாராம விகாரைக்கு உட்செல்லும் வீதியின் நடுப்பகுதிக்கு கொங்ரீட் இடுதல்

மேற்கூறப்பட்ட வேலையினை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2010 நவம்பர் 09 ஆந் திகதி ரூபா 187,500 தொகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பமுனுவ கிராம அபிவிருத்தி படையணிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2011 சனவரி 12 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின்போது வீதியின் 52 அடி நீளப் பகுதியின் கொங்ரீட் தட்டுக்கள் கழன்று $^{3}/_{4}$’’ கல் குவிந்து காணப்பட்டது.

**(இ) சபைக்குச் சொந்தமான றுக்மல்கம பழைய கட்டிடத்தை பிள்ளைகள் பராமரிக்கும் நிலையமாக நவீன மயப்படுத்தல்**

கட்டிடத்திற்குச் சொந்தமான காணியினுள் 08 ரெட்பாம் கன்றுகள் வழங்கி நாட்டுவதற்காக ஒரு கன்றுக்கு ரூபா 6,750 படி ரூபா 54,000 தொகை உரிய ஒப்பந்தக்காரரான றுக்மலே மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 2010 மே 14 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் இக்கன்று வகைகளையே கொடிகமுவ மரணச் சடங்கு நிலையத்தைச் சுற்றி நட்டுவதற்காக கன்று ஒன்றுக்கு ரூபா 5,200 படி கொடிகமுவ கிராம அபிவிருத்தி படையணிக்கு 2010 ஒக்தோம்பர் 15 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தமையினால் இவ்வழங்கலுக்காக ரூபா 12,400 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினுள் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்